S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வெள்ளி ஜனவரி 02 * 2025 * மலர் -1 * இதழ்-215* VOL-1 * ISSUE-215 விலை ரூ.3 * பக்கம் -4

### ரூ.183.86 கோடி ஒதுக்கீடு: 9.90 லட்சம் பேர் பயனடைவர்:

# அரசு ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ்!

## முதலமைச்சர் ஸ்டாலின் அறிவிப்பு!!

சென்னை, ஜன.2

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொகுப்பூதியர்கள், ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் போனசை முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அந்த வகையில் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தலா ரூ.3,000 வழங்கப்படும். தொகுப்பூதியதாரர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் தலா ரூ.1,000 கிடைக்கும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டக்கூடிய வகையில், பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி, அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட, 'நான் முதல்வன் வரை', மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி, மாணவக் கண்மணிகளுக்குத் திட்டம், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் வரை துறை தோறும் பல முன்னோடி திட்டங்களை,

எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார். நாடுபோற்றும் இத்திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவினை எழுச்சியோடு கொண்டாடி மகிழ 2024–2025ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி சுமார் 9 லட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள். இந்த உத்தரவின்படி, 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும். தொகுப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 2024–2025–ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும். "சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 பொங்கல் பரிசாக வழங்கப்படும்.



பாளை சவேரியார் பேராலயத்தில் ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, சட்டமன்ற உறுப்பினர்கள் ரூபி மனோகரன், அமிர்தராஜ், காங்கிரஸ் கட்சியின் அமைப்புச் செயலாளர் ராம் மோகன் ஆகியோர் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



ஆங்கில புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு நாமக்கல் ஆஞ்சநேயருக்கு 3 டன் மலர்களால் புஷ்பாஞ்சலி நடந்தது. நீண்ட வரிசையில் நின்று ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.



ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஊட்டி ரோஜா பூங்காவில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது.



கிருஷ்ணகிரி பகுதியில் இரண்டாம் போக நெல் சாகுபடிக்காக நாற்று நடும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

### ராசிபுரத்தில்

# கிணற்றில் தவறி விழுந்து பள்ளி மாணவன் பலி!

## புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக 'சர்ச்' சென்றபோது பரிதாபம்!!

ராசிபுரம்,ஜன.1

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் செட்டியார் தெரு பகுதியைச் சேர்ந்தவர் ரமேஷ். இவரின் மனைவி ஷீலா. இவர்களின் மகன் எலைஷா பிளசன்,(12) தனியார் பள்ளியில் 8–ம் வகுப்பு படித்து வந்தார்.

இவர்கள் கடந்த 10 வருடமாக சாமுவேல் என்பவரது டிரஸ்ட் நிலத்தில் என்ற தேவ சபை நடத்தி வருகின்றனர். இந்த சபையின் அருகே பயன்படுத் தப்படாமல் சுமார் 60 அடி ஆழம் கொண்ட கிணறு உள்ளது. இதில், முழுவதும் மழைநீர், சாக்கடை நீர் நிரம்பி உள்ளது.

நள்ளிரவில் நடைபெறும் புத்தாண்டு கொண்டாடத்திற்காக சேலம் சாலையில் உள்ள சர்ச்சில் நேற்று பகலிலேயே கிறிஸ்தவர்கள் கூடினர். மாலை 3 மணியில் இருந்து ஜெபத்தில் ஈடுபட்டு வந்தனர். மாலை 4 மணியளவில் ஆலயத்தை விட்டு வெளியே வந்த எலைஷா பிளசன் கிணற்றின் அருகே வந்தவர் எதிர்பாராத விதமாக அதில் தவறி விழுந்துள்ளார். வெகு நேரமாகியும் எலைஷா பிளசனை காணாத பெற்றோர் அவரை கிறிஸ்தவ ஆலயத்தில் சுற்றுப்புறங்களில் தேடினர். அப்போது கிணற்றுக்குள் அசைவற்று மகன் மிதப்பதை கண்டு திடுக்கிட்டு அலறினார். இது பற்றி ராசிபுரம் தீயணைப் புபடை அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உடனே சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த ராசிபுரம் தீயணைப்பு வீரர்கள் எலைஷா பிளசனை மீட்டு ராசிபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர்கள் அந்த சிறுவன் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து ராசிபுரம் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். புத்தாண்டை வரவேற்க காத்திருந்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் ராசிபுரத்தில் சோகத்தை ஏற்படுத்தியது.



2026 ஆம் ஆண்டு புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு திருப்பூர் தாராபுரம் ரோடு கோட்டை மாரியம்மன் கோவிலில் அம்மனுக்கு ரூபாய் நோட்டு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. ஏராளமான பக்தர்கள் சாமிதரிசனம் செய்தனர்.




பொங்கல் பண்டிகையையொட்டி நெல்லை பாளையங்கோட்டை மார்க்கெட்டில் பனங்கிழங்குகள் விற்பனைக்காக கட்டுக்கட்டாக குவிக்கப்பட்டுள்ளது.

# கேஸ் சிலிண்டர் விலை ரூ.110 உயர்வு!

சென்னை,ஜன.2–

வணிக பயன்பாட்டிற்கான கேஸ் சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்தது. கடந்த 2 மாதங்கள் குறைந்த நிலையில் இப்போது அதிகரித்துள்ளது. பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கேஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.



சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது. அந்த வகையில் இன்று எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த 2 மாதங்களாக விலை குறைந்த நிலையில் இந்த மாதம் உயர்ந்துள்ளது.

அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்து, ரூ.1,849.50க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றமின்றி ரூ.868.50 காசுகள் என்ற நிலையில் நீடிக்கிறது.



கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் கடந்த சிறப்பு தீவிர திருத்தம் (SIR 2002/2005) வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் பெயர் அல்லது உறவினரின் பெயர் இடம்பெறாத வாக்காளர்களுக்கு விசாரணை செய்யும் பொருட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டு வரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர்பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# இலவச பேருந்து பயண அட்டை பெற மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்கலாம்!

## கிருஷ்ணகிரி கலெக்டர் தகவல்!!

கிருஷ்ணகிரி, ஜன.2

கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் இலவசபேருந்துபயணஅட்டை பெறவிண்ணப்பிக்கலாம் என மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவயட்டத்தில் முழுமையாக கண் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் மாவட்டம் முழுவதும் பயணம் மேற்கொள்ளவும், அனைத்து வகை மாற்றுதிறனாளிகளும் இருப்பிடத்தில் இருந்து பணி, பயிற்சி, தொடர் மருத்துவ சிகிச்சைக்கு செல்ல இலவச பேருந்து பயண சலுகை அட்டை வழங்கப்படுகிறது.

இதற்காக மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, ஆதார் அட்டை, பணி சான்றிதழ் மற்றும் பயிற்சி சான்றிதழ், புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் அருகில் உள்ள இ&சேவை மையங்களில்விண்ணப்பித்து இலவச பயண அட்டை பெற்று பயன் பெறலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



# புதுக்கோட்டை அருகே 8ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு என்.எம்.எம்.எஸ். பயிற்சி!

புதுக்கோட்டை,ஜன.2

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டை அருகே தமிழ்நாடு அறிவியல் இயக்கமும், ஸ்டாலின் நாராயணசாமி அகடாமியும்இணை ந்து நடத்தும் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு என் எம் எம் எஸ் சிறப்பு பயிற்சி வகுப்பு கந்தர்வகோட்டை ஒன்றியத்தில் நடை பெற்று வருகிறது. இப்ப பயிற்சி வகுப்பில் 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ப யின்று வருகிறார்கள். தொடர்ந்து மாணவர்களுக்கு பயிற்சி அளி க்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அறிவியல் இயக்க புதுக் கோட்டை மாவட்ட தலைவர் முத்துக்குமார் வெள்ளாள விடுதி, துவார் மையங்களை பார்வையி ட்டு மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். குளத்தூர் நாயக்கர் பட்டி நடைபெறும் பயிற்சி வகுப்பினைதமிழ் நாடு அறிவியல் இயக்கத்தின் கந்தர்வ கோட்டை ஒன்றிய செய லாளர் ரகமதுல்லா பார்வையிட்டு பேசும் பொழுது மாணவர்கள் அனைவரும் என். எம். எம் எஸ் தேர்வில் வெற்றி பெறுவதற்கு தொ டர்ந்து தினசரி வகுப்பில் நடத்தக் கூடிய மன திறன் தேர்வு, படிப்பறி வுத் திறன் தேர்வு ஆகியவற்றை படிக்க வேண்டும். தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசால் மாதம் தோறும் ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இத் தேர்வினை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தேர்வு எதிர்காலத்தில் போட்டித் தேர்வு எழுதுவதற்கு வாய்ப்ப ளிக்கும். தேர்வில்கேட்கப்படும் வினாக்களுக்கு நான்கு விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும் அதில் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுத வேண்டும். மாணவர்கள் அறிவியல், சமூக அறிவியல் கணிதம் உள்ளிட்ட பாடப் பகுதிகளை நன்றாக படித்து குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். அது மட்டுமில்லாமல் பயிற்சி வகுப்பில் நடத்தக்கூடிய பாடங்களை யும் குறிப்பெடுத்து தேர்வினை சிறப்பாக எழுதி வெற்றி பெற வேண்டும் என அறிவுரைய வழங்கினார். முன்னதாக அறிவியல், க ணிதம், சமூக அறிவியல் குறித்து வினாக்கள் கேட்கப்பட்டது. சிறப்பாக பதிலளித்த மாணவர்களுக்கு புங்கன் கன்று, மகிழோ, பூமருது, சொற்பம், மந்தாரை, சரண் கொன்றை, பொய்யா, நாவல், பெருநெல்லி, விளாம்பழம் உள்ளிட்ட மரக் கன்று வழங்கி பாராட்டப் பட்டது. முன்னதாக மகேந்திரவர்மன் அனைவருக்கும் மதிய உண வு வழங்கினார்.

# வங்கி ஊழியர் – அதிகாரிகள் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம்!

கிருஷ்ணகிரி, ஜன.02

கிருஷ்ணகிரி இந்தியன் வங்கி முன்பு, அகில இந்திய வங்கி ஊழியர்கள், அதிகாரிகள் கூட்டமைப்பு சார்பில், வாரத்தில் 5 நாட்கள் மட்டும் வேலை நாட்களாக அறிவிக்கக் கோரி நேற்று மாலை ஆர்ப்பாட்டம் நடந்தது. அகில இந்திய பொது செயலாளர் ஹரிராவ் தலைமை வகித்தார். வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ராஜசேகர், அகில இந்திய வங்கி ஊழியர் சங்க செயற்குழு உறுப்பினர் அசோக்குமார், அகில இந்திய வங்கி அதிகாரிகள் சம்மேளனம் செயற்குழு உறுப்பினர் தினேஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஆர்ப்பாட்டத்தில், வாரத்தில் 5 நாட்கள் மட்டும் வேலை நாட்களாக அறிவிக்க வேண்டும். தனியார் மய கொள்கையை மத்திய அரசு கைவிட வேண்டும்.

பொதுத்துறை வங்கிகளை தனியாருக்கு விற்கும் முடிவை கைவிட வேண்டும். ஐ.டி.பி.ஐ. வங்கியின் பொதுத்துறை பங்குகளை தனியாருக்கு விற்கக் கூடாது.

தற்காலிக ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெற வேண்டும். பழைய பென்சன் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# புதுக்கோட்டை அருகே காங்கிரஸ் கட்சி சார்பில் பிஎல்ஏ 2 முகவர்கள் கலந் தாய்வு கூட்டம்!

புதுக்கோட்டை,ஜன.2



புதுக்கோட்டை அருகே ஆலங்குடி காங்கிரஸ் கட்சி சார்பில் வாக்கு ச்சாவடி நிலைய முகவர்கள் பிஎல்ஏ 2 கலந்தாய்வு கூட்டம் ஆலங்குடி கீரமங்கலம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி காங்கிரஸ் கட்சியி ன் நகர தலைவர் அரங்குளவன் கீரமங்கலம் நகரத் தலைவர் சரவணன் ஆலங்குடி தொகுதி பொறுப்பாளர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற து.

கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட தலைவர் ராமசுப்பு ராம் தலைமையில் நடந்தது. காங்கிரஸ் கட்சியின் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் சிறப்பு அழைப்பாள ராக கலந்து கொண்டு பிஎல்ஏ 2 முகவர்கள் கலந்தாய்வு கூட்டத்தில் முகவர்களை உற்சாகப்படுத்தினார்.

அப்போது அவர் கூறுகையில்...

எஸ் ஐ ஆர் பணிகள் முடிந்தது தொடர்பாக அறிவிவிப்பு வெளியி டப்பட்டு உள்ளது இது தொடர்பாக நீக்குதல் சேர்த்தல் திருத்தம் இ வைகள் விடுபட்டு இருந்தாலும் நடைபெறக்கூடிய சிறப்பு முகாம்களில் அங்கன்வாடி பணியாளர்கள் விஏஓ மற்றும் பிஎல்ஓ ஆகிய அதிகாரி களிடம் உடனடியாக கேளுங்கள் அவர்கள் தகுந்த விளக் கம் கொடுப்பார்கள் என்றார்.

மேலும் நடைபெற உள்ள 2026 சட்ட மன்றத் தேர்தல் ஆலங்குடி சட்ட மன்ற தொகுதியாக திமுக காங்கிரஸ் எதுவாக இருந்தாலும் சிவகங்கை சட்டமன்ற தொகுதி எதுவாக இருந்தாலும் அல்லது திமுக கூட்டணி கட்சியா க அமைந்தாலும் அல்லது காங்கிரஸ் கூட்டணியில் ஆலங்குடிக்கு தனியாக தொகுதி கொடுத்தாலும் ஒற்றுமை யாக பணியில் ஈடுபட வேண்டும்.திமுக காங்கிரஸ் கூட்டணி உறுதி வெற்றி பெறுவதும் நமதே என கூறினார். கலந்தாய் கூட்டத்தில் ஆலங்குடி மற்றும் கீரமங்கலம் வாக்குசல்சாவடி நிலைய முகவர்க ள் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் பி எல் ஏ 2 முகவர்கள் மாவட்ட ஒன்றிய வட்டார நகர கி ளை கழக காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்ட னர்.

# தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் இருளர் இன மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்ட செயலாளர் நெப்போலியன் வழங்கினார்!!



கிருஷ்ணகிரி, ஜன.2

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம் பள்ளி அடுத்த என்.தட்டக்கல் கிராமத்தில், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக 17க்கும் மேற்பட்ட இருளர் இன குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களது வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால், கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு வந்த அரசு அதிகாரிகள், இவர்களுக்குப் புதிய வீடுகள்கட்டித்தரப்படும் எனபட்டாவழங்கியும் வீடு கட்டி தருவதற்கான அரசாணை வழங்கியும் உறுதி அளித்தனர். அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி, தங்களது பழைய வீடுகளை இடித்துவிட்டு வாழ்வாதாரத்திற்காக வளர்த்து வந்த ஆடு மாடுகளை விற்று முதற்கட்டமாக வீடுகளுக்கான அஸ்திவாரம் (பேஸ் மட்டம்) மட்டும் போடப்பட்டது.

ஆனால், அதன் பிறகு கடந்த நான்கு மாதங்களாக எந்தவித பணிகளும் நடைபெறவில்லை. வீடுகளை இழந்த மக்கள், கடும் வெயில் மற்றும் மழையிலும், விஷ ஜந்துக்களின் நடமாட்டம் உள்ள இடத்தில் வசித்து வருகின்றனர். இது குறித்து பலமுறை அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

அதிகாரிகளின் மெத்தனப் போக்கினால் அவதிபட்டு வருகின்றனர் இதனை செய்தி ஊடகம் வாயிலாக அறிந்த தமிழக வாழ்வுரிமை கட்சியின் நிறுவனத் தலைவர் தி. வேல்முருகன் அவர்கள் ஆணைக்கு இணங்க ஒருங்கிணைந்த மாவட்டச் செயலாளர் நெப்போலியன் ஒருங்கிணைப்பில் பர்கூர் தொகுதி செயலாளர் முன்னிலையில் காவேரிப்பட்டின கிழக்கு ஒன்றிய செயலாளர் சக்தி அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கினார் அப்போது மாவட்ட மகளிர் அணி மீனா மாவட்ட துணைச் செயலாளர் ராமகிருஷ்ணன் மற்றும் ஒன்றிய துணைத் தலைவர் முனிபால் ஒன்றிய துணைச் செயலாளர் பெரியசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.



# ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தினர் உண்ணாவிரதம்!

கிருஷ்ணகிரி, ஜன.02

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு, தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில், உண்ணாவிரத போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்திற்கு மாவட்ட தலைவர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார்.

மாநில செயற்குழு உறுப்பினர் சென்னப்பன் வரவேற்றார்.

முன்னாள் மாவட்ட தலைவர் சரவணன்துவக்கவுரைஆற்றினார்.மாவட்ட செயலாளர் கோபால கண்ணன் கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார்.

அரசு ஊழியர் சங்க மாவட்ட துணை தலைவர் ஜெகதாம்பிகா சிறப்புரை ஆற்றினர். மாவட்ட பொருளாளர் ஜேம்ஸ் குமார் நன்றி கூறினார்.

உண்ணாவிரத போராட்டத்தில், மாநில துணைத் தலைவர் இளங்குமரன் பேசும்போது, 100 நாள் வேலை திட்டத்தை 125 நாட்களாக உயர்த்துவதாக கூறும் ஒன்றிய அரசு அதற்கான நிதியை 40 சதவீத பணத்தை மாநில அரசு வழங்க வேண்டும் என்று சொல்கிறது. நிதி இல்லாத மாநிலங்கள் இந்த திட்டத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். எனவே இந்த மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றார்.

...விரைவில்...
உங்கள் உள்ளாட்சி அரசு நாளிதழ்...
அறிவே ஆன்மீகம் ஜோதிட செய்திகள்.....
வாழ்விலும், தொழிலிலும் உள்ள அனைத்து பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு வாழ்வில் நிரந்தர தீர்வு காண, "வாழ்வில் வெற்றி பெற்று", "வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழ" வழிகாட்டுகின்றார்.
40 ஆண்டுகள் ஆன்மீகம் மற்றும் ஜோதிட பணிகளை செய்து வரும்....
சிவத்திரு. சிவமணி சுவாமிகள்
96593 20245 - 98426 79941
உள்ளாட்சி அரசு நாளிதழ்

## சேலம் கலெக்டர் அலுவலகத்தில்

# மனநலம் பாதிக்கப்பட்ட பெண் தற்கொலை முயற்சி!

சேலம் ஜன.02



சேலம் அல்லிக்குட்டை பகுதியைச் சேர்ந்த சற்று மனநலம் பாதிக்கப்பட்ட பெண் லலிதா. இவர் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் திடீரென தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அங்கிருந்த ஊழியர்கள் துரிதமாக செயல்பட்டு தீயை அணைத்தனர். இது குறித்து லலிதா கூறும் போது, தனது கணவருக்கு மதுப்பழக்கம் உள்ளதால், கண்ணால் அவருடன் வாழ முடியவில்லை என்றும், தனக்கும் தன் பிள்ளைகளின் வாழ்வாதாரத்திற்காக அரசு தனக்கு இலவச வீடு வழங்க வேண்டும் என தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டதாக லலிதா கூறினார்.

இந்த சம்பவத்தால் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சற்று பரபரப்பு ஏற்பட்டது.

# இந்தியா ஐடிஎம்இ டெக்னிக்கல் அவார்ட்ஸ் 2025: சிறந்த சாதனையாளர்களுக்கு ஐடிஎம்இ சொசைட்டி விருது!

திருப்பூர், ஜன.02



இந்தியா இன்டர்நேஷனல் டெக்ஸ்டைல் மெஷினரி எக்ஸிபிஷன்ஸ் சொசைட்டி (இந்தியா ஐடிஎம்இ சொசைட்டி), மூன்றாவது இந்தியா ஐடிஎம்இ டெக்னிக்கல் அவார்ட்ஸ் 2025 நிகழ்ச்சியை மும்பையில் வெற்றிகரமாக நடத்தியது. தொழில்துறை தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பங்கேற்ற இந்த விழா, இந்திய டெக்ஸ்டைல் இன்ஜினியரிங் துறையின் வளர்ச்சியை பிரதிபலிக்கும் முக்கிய மேடையாக அமைந்தது.

இந்திய அரசின் ஜவுளி மற்றும் கனரக தொழில்துறை அமைச்சகங்களின் ஆதரவுடன், எஸ்பிஐ வங்கியின் உறுதுணையோடு நடைபெற்ற இந்த விழாவில், புதுமை, சஸ்டைனபிலிட்டி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பத்தலைமைத்துவம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். யமுனா மெஷின் ஒர்க்ஸ், சைடெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ், பிரசாந்த் கேமடெக்ஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் முக்கிய விருதுகளை பெற்றன. மாணவர்களின் கண்டுபிடிப்புகள் விழாவின் முக்கிய அம்சமாக திகழ்ந்தன. சௌரவ் பானர்ஜி, பாக்கியஸ்ரீ காடே உள்ளிட்டோர் சாம்பியன் விருதுகளை வென்றனர். இந்திய டெக்ஸ்டைல் இன்ஜினியரிங் துறையின் எதிர்காலம் புதுமை, இளம் தலைமுறை பங்கேற்பு மற்றும் கூட்டு முயற்சிகளால் பிரகாசமாக இருப்பதை இந்த விழா மீண்டும் உறுதிப்படுத்தியது.

# ஹெட்டிச் சென்னையில் புதிய அனுபவ மையம் மற்றும் HeX ஸ்டோர் மூலம் தனது அனுபவ அடையாளத்தை வலுப்படுத்துகிறது!

சென்னை, ஜன.02



உலகின் முன்னணி பர்னிச்சர் ஃபிட்டிங்ஸ் தயாரிப்பாளரான ஹெட்டிச், உயர்த்தப்பட்ட ஹெட்டிச் எக்ஸ்பீரியன்ஸ் சென்டர் திறப்பு மற்றும் நகரின் முதல் ஹெட்டிச் எக்ஸ்க்ளூசிவ் (HeX) ஸ்டோர் அறிமுகம் மூலம் சென்னை நகரில் தனது அனுபவ அடிப்படையில் முன்னெடுப்புகளை மேலும் வலுப்படுத்தியுள்ளது. இந்த முயற்சி, வீட்டு உரிமையாளர்கள், கட்டிடக்கலைஞர்கள்மற்றும்உள்அலங்காரம்துறையினருக்கு ஹெட்டிச் தீர்வுகளை நேரடியாக அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குகிறது.

புதுப்பிக்கப்பட்ட ஹெட்டிச் எக்ஸ்பீரியன்ஸ் சென்டரில், நிறுவனத்தின் விருது பெற்ற முழுமையான பர்னிச்சர் தீர்வுகள் ஒரே இடத்தில் அறிமுகப்படுத்தப்படுவதுடன், இலவச டிசைன் ஆலோசனை மற்றும் நேரடி பார்வை சேவைகள் வழங்கப்படுகின்றன. இதனைத் துணைபுரியும் வகையில் தொடங்கப்பட்டுள்ள HeX ஸ்டோர், நவீன வீடு அமைப்புகள் பிரதிபலிக்கும் நடைபயண காட்சிகள், தயாரிப்புகளை கைமுறையாக அனுபவிக்கும் வசதி மற்றும் நிபுணர் வடிவமைப்பாளர்கள் ஆலோசனைகளுடன், வாங்கும் அனுபவத்தையும் ஒருங்கிணைக்கிறது.

இந்த விரிவாக்கம் குறித்து கருத்து தெரிவித்த ஹெட்டிச் இந்தியா, சார்க், மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்கா மேலாண்மை இயக்குநர் திரு. ஆண்ட்ரே எம் கோல்ட்,

"சென்னை பாரம்பரியத்தையும் நவீன வாழ்க்கை முறையையும் இணைக்கும் முக்கிய சந்தையாகும். எங்களின் எக்ஸ்பீரியன்ஸ் சென்டர் மற்றும் முதல் HeX ஸ்டோர் மூலம், ஜெர்மன் பொறியியலின் தரத்தையும் மாயாஜால அத்தையும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அனுபவிக்கும் சூழலை உருவாக்குகிறது," என்றார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

# புதுக்கோட்டை அருகே கண்மாயில் குளிக்க சென்ற 2 சிறுமிகள் நீரில் மூழ்கி சாவு!

புதுக்கோட்டை, ஜன.2

புதுக்கோட்டை மாவட்டம் லேனாவிளக்கு அருகே கண்மாயில் குளிக்கச் சென்ற2 சிறுமிகள் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழப்பு,

2 சிறுமைகளின் பெற்றோர்கள் கூலி வேலைக்கு சென் றிருந்த நிலையில் அரையாண்டு தேர்வு விடுமுறையில் வீட்டிலிருந்த சிறுமிகள் கண்மாயில் பாதுகாப்பின்றி குளிக்கச் சென்றதால் நேர்ந்த விபரீதம், சிறுமிகளின் உயிரிழப்பால் சோகத்தில் மூழ்கிய கிராமம்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே லேனா விளக்கு சுங்கச்சாவடி உள்ளது. இதற்கு அருகாமையில் கப்ப த்தான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரம் என்பவரது மகள் பாண்டிஸ்ரீ (14), அதே கிராமத்தைச் சேர்ந்த சேகர் என்பவரது மகள் கனிஷ்கா (13). பாண்டிஸ்ரீ புதுக்கோட் டை பேராங்குளம் அருகே உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வந்தனர்.

இந்நிலையில் கனிஷ்கா லெம்பலக்குடியில் உள்ள ஊ ராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்துள்ளார். இந்நிலையில் தான் தற்பொழுது அரையா ண்டு தேர்வு முடிந்து பள்ளிவிடுமுறைவிடப்பட்டுள்ள நி லையில் பாண்டிஸ்ரீயும் கனிஷ்காவும் வீட்டில் இருந்துள் ளனர்.

அருகருகே உள்ள வீடுகளில் இவர்கள் வசித்து வரக்கூ டிய நிலையில் இந்த2 பேரின் பெற்றோர்களும் கூலி வேலைக்கு சென்ற நிலையில் பாண்டிஸ்ரீயும் கனிஷ்கா வும் அப்பகுதியில் உள்ள வன்னியநேந்தல் கண்மாயில் பாதுகாப்பின்றி குளிக்க சென்றுள்ளனர்.

அப்போது அந்தக் கண்மாயில் இரண்டு சிறுமிகளும் கு ளிக்கும் பொழுது எதிர்பாராத விதமாக கண்மாய் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பின்னர் அந்த 2 சிறுமிகளின் சடலமும் நீரில் மிதந்த நி லையில் அவ்வழியாகச் சென்ற அந்த கிராமத்தினர் சி றுமிகளின் சடலம் மிதந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்து உடனடியாக சிறுமிகளின் சடலத்தை மீட்டுள்ளனர்.

பின்னர் இது குறித்து இரண்டு சிறுமிகளின் பெற்றோருக்கும் போலீசாருக்கும் தகவல் தெரிவித்துள்ளனர். பின்னர் சிறுமிகளின் பெற்றோர் பதறி அடித்து நிகழ்விடத்திற்கு வருகை தந்து உயிரிழந்த சிறுமிகளின் சடலத்தை பார்த்து கதறி அழுதது கிராமத்தையே சோகத்தில் மூழ்கடித்தது. பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த நமணசமுத்திரம் போலீசார் உயிரிழந்த 2 சிறுமிகளின் சடலத்தையும் கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். திருமயம் அருகே 2 கல்லூரி மாணவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்த சோகமே தீராத நிலையில் 2 பள்ளி சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.


உயிரிழந்த சிறுமிகள்


கோயம்புத்தூர் மாவட்ட மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, ஆயத்தபணியின் ஒருபகுதியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முதல் நிலை சரிபார்ப்பு பணி (First Level Checking of EVMs.VVPATs) நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் / மாவட்ட தேர்தல் அலுவலர் பவன்குமார் க.கிரியப்பனவர் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரைத்தாள்) முகமது குதரத்துல்லா உள்ளார்.



# பா.ம.க. பெண் நிர்வாகிக்கு அன்புமணி ஆதரவாளர் கொலை மிரட்டல்!

சேலம், ஜன.2

சேலம் வடக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் அணி பொருளாளராக உள்ளவர் கோகிலா. இவர் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சேலத்தில் நடைபெற்ற பாமக பொதுக்குழு கூட்டத்தில் அக்கட்சியின் செயல் தலைவர் ஸ்ரீகாந்திக்கு, பசுமைத்தாயக அமைப்பில் பதவி வழங்கப்பட்டது குறித்து, தனது முகநூல் புத்தகத்தில் அவரை பாராட்டி பதிவிட்டுள்ளார். இந்நிலையில் பாமக கிழக்கு மாவட்ட செயலாளர் ஜெயபிரகாஷ் என்பவர், கோகிலா குறித்து முகநூல் புத்தகத்தில் அருவருக்கதக்க வகையில் தனது ஆதரவாளர்களை வைத்த வார்த்தைகளால் திட்டி உள்ளார். மேலும் கோகிலாவிற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இனி ராமதாஸ் தரப்புக்கு ஆதரவாக பதிவிட்டாலோ அல்லது பேசினாலும் வீடு புகுந்து கொலை செய்து விடுவோம் என ஜெயப்பிரகாஷ் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறி, கோகிலா மற்றும் பாமக நிர்வாகிகள் ஏராளமானோர், இன்று கொண்டலாம்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தனர்.

இதனிடையே ராமதாஸ் தரப்பு ஆதரவாளர்களுக்கு அன்புமணி தரப்பினர் கொலை மிரட்டல் விடுத்த சம்பவம், தற்போது சேலத்தில் உள்ள பாமகவினர் அடியே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




# புதுக்கோட்டை அருகே தமிழ்நாடு தவ் ஹீத் ஜமாத் கிளை சார்பில் மார்க்க விளக்க தெருமுனை கூட்டம்!

புதுக்கோட்டை, ஜன.2

ஆலங்குடி தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் கிளை சார்பில் மார்க்க விளக்க தெருமுனை கூட்டம் ஆலங்குடி கலிபில்லா நகரில் நடந்தது.

கூட்டத்திற்கு கிளை தலைவர் முகமது இஸ்மாயில் தலைமை வகித்தார். சிறப்புரை டிஎன்டிஜே மாவட்ட தலைவர் சித்திக் ரகுமான் மற்றும் மாவட்ட பேச்சாளர் முஹம்மது மஹ்தும் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் கிளைத் செயலாளர் முகமது அலி, பொருளாளர் முகமது ஆசிக், துணை செயலாளர் முகமது பைசல், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடந்த தேர்தலின் போது இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீட்டை அதிகரித்து தருவோம் என திமுக தனது தேர்தல் அறிக்கையில் கூறி இருந்தது, இஸ்லாமியர்களின் நெடு நாளைய கோரிக்கையை நிறைவேற்றாமல் மறு தேர்தலை நோக்கி இந்த ஆட்சி சென்று கொண்டிருக்கிறது.

வரும் தேர்தலுக்குள் முன்சிறுபான்மை இஸ்லாமியர்களின் ஜீவாதார கோரிக்கையான இட ஒதுக்கீட்டை குறைந்தபட்சம் 5 சதவீதமாக அதிகரித்து தருவதன் மூலம் மட்டுமே இஸ்லாமியர்களின் ஏகோபித்த ஆதரவை இக்கூட்டணி பெற முடியும் என இந்த கூட்டம் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது.

ஆலங்குடி வட்டம் கல்லாலங்குடி பஞ்சாயத்திற்கு உட்பட்ட பாரதி நகர் மற்றும் கலிப்புல்லா நகர் பகுதியில் உள்ள நெட்டுனூத்து கரையில் நீண்ட நெடுங்காலமாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றன மக்களுக்கு பட்டா வழங்கிடஇந்த தெருமுனை பிரச்சாரக் கூட்டத்தின் வாயிலாக மற்றும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தெருமுனைபிரச்சாரகூட்டத்திற்கு பெண்கள் பள்ளி குழந்தைகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மத்திய அமைச்சருக்கு கனிமொழி எம்.பி. பதிலடி!



தூத்துக்குடி, ஜன.2

தமிழ்நாட்டிற்கு ரூ.2,291 கோடி கல்வி நிதியை விடுவிப்பதைத் தவிர அனைத்து விஷயங்களிலும் மத்திய பாஜக அரசு ஆர்வம் காட்டுவதாக கனிமொழி எம்பி விமர்சித்துள்ளார். மதுரைஞூரங செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறுகையில், திருப்பரங்குன்றம் மலை மீது விளக்கேற்றுவதைத் தடுக்க முடியாது இந்த விவகாரத்தை அரசியல் ரீதியாக தமிழ்நாடு அரசு கையாள்வது கண்டிக்கத்தக்கது என்று கூறி இருந்தார்.

இதற்கு கனிமொழி எம்பி., வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், தமிழ்நாட்டுப் பிள்ளைகளுக்கு சேரவேண்டிய ரூ.2,291 கோடி கல்வி நிதியை விடுவிப்பதைத் தவிர, தமிழ்நாட்டில் நடக்கும் மற்ற எல்லாவற்றிலும்மத்தியபாஜகஅரசுஆர்வம்காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

# விஜய்க்கு அரோகரா திருச்செந்தூர் கோவிலில் இளைஞர் செயலால் அதிர்ச்சி!

தூத்துக்குடி, ஜன.2

திருச்செந்தூர் முருகன கோயில் வளாகத்திற்குள் வீடியோ எடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், கோயிலுக்குள் "தளபதி விஜய்க்கு அரோகரா... தமிழக வெற்றிக் கழகத்திற்கு அரோகரா" என தவெக தொண்டர்கள் சிலர் கோஷம் எழுப்பினர். மேலும், "அடுத்த வருடம் அறநிலையத் துறையை டேக் ஓவர் செய்து, பாஸ் வழங்குவோம். இந்த மாதிரி வரிசையில் நிற்க அவசியமில்லை" எனக் கூறி விஜய்யின் புகைப்படத்தை காட்டி பக்தர்களிடம் இளைஞர்கள் வாக்கு சேகரித்தனர்.

இந்தக் காட்சிகளை ரீல்ஸாகவும் பதிவிட்டுள்ளனர். சமூக வலைத்தளங்களில் இந்தக் காட்சிகள் வைரலாகி வரும் நிலையில், கோயிலுக்குள் வீடியோ எடுத்து பக்தர்களுக்கு இடையூறாக நடந்து கொண்ட இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறநிலையத் துறைக்கு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.


திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் முன்னாள் முதல் அமைச்சர் காமராஜர் குறித்து அவதூறாக பேசிய யூடூபர் முக்தார் மீது நடவடிக்கையும் எடுக்காத நிலையில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த 29 ஆம் தேதி காங்கிரசு கட்சி மாவட்ட தலைவர் பிரபு தலைமையிலான 50க்கும் மேற்பட்ட கட்சியினர் வாணியம்பாடி பேருந்து நிலையம் முன்பாக உள்ள இந்திராகாந்தி சிலைக்கு முன், காமராஜர் படத்தை வைத்துக்கொண்டு, சத்தியாகிரகப்போராட்டத்தில்ஈடுபட்டனர்.னுமதிபெறாமல்சத்தியாகிரகப்போராட்டத்தில் ஈடுபட்டதாக கூறி போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நகர காவல்துறையினர் கைது செய்தனர்.

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் வீட்டுமனை பட்டா பெற்ற கோவை மாவட்ட பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க ஸ்டாலினுக்கும், துணை முதல்வர் உதயநிதிக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்தனர்





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி பள்ளியில் 30122025 அன்று நடைபெற்ற அரசு விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம், பிள்ளையார்புரம் சில்வர் ஜூபிலி போத்தனூர் வண்ணார பேட்டை சீனிவாசபுரம் கல்லாங்குத்து, இந்திரா காலனி, ஈச்சனாரி பாடசாலை வீதி மற்றும் கணேசபுரம், குரும்பபாளையம், பிச்சனூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த 994 பயனாளிகளுக்கு வீட்டு மனைப்பட்டாக்களை வழங்கினார்.



கோயம்புத்தூர் மாவட்டம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம், பிள்ளையார்புரம் அரசுநத்தம் புறம்போக்கு நிலத்தில் 5 வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி வசித்துவரும் பட்டா இல்லாத நபர்களுக்கும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பட்டாவில் உள்ள அளவு வேறுபாடுகள் மற்றும் நான்கு மால் எல்லைகளில் உள்ள வேறுபாடுகளை களைந்து சரியான பட்டா தயார் செய்து தகுதியான 814 பயனாளிகளுக்கும், குறிச்சி கிராமம், சில்வர் ஜூபிலி, அரசு புறம்போக்கு மயானத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி வசித்துவரும் 73 பயனாளிகளுக்கும், போத்தனூர் வண்ணாரபேட்டை அரசு புறம்போக்கில் வசித்து வரும் 14 பயனாளிகளுக்கும், சீனிவாசபுரம் கல்லாங்குத்து புறம்போக்கில் வசித்துவரும் 9 பயனாளிகளுக்கும், இந்திராகாலனி நத்தம் புறம்போக்கில் வசித்துவரும் 29 பயனாளிகளுக்கும், ஈச்சனாரி பாடசாலை வீதி மற்றும் கணேசபுரம் ஆகிய நத்தம் புறம்போக்கில் வசித்து வரும் 18 பயனாளிகளுக்கும், மதுக்கரை கிராமம், குரும்பபாளையம் பகுதியில் வசித்து வரும் 12 பயனாளிகளும், பிச்சனூர் கிராமத்தில் வசித்து வரும் 25 பயனாளிகள் என மொத்தம் 994 பயனாளிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் வீட்டு மனைப்பட்டாக்களை வழங்கினார்.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின் சார்பில் வீட்டுமனைப் பட்டா பெற்ற மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம், சில்வர் ஜூபிலி, பகுதியை சேர்ந்த பயனாளி பழனியம்மாள் தெரிவித்தாவது,

என் பெயர் பழனியம்மாள், என் கணவர் பெயர் ஆரோக்கியசாமி நான் சமையல் வேலை செய்து வருகிறேன். குறிச்சி கிராமம், சில்வர் ஜூபிலி, நாங்க நீண்ட வருஷமாக வசித்து வருகிறோம். எங்களுக்குன்னு சொந்தமாக எந்தவொரு சொத்தும் கிடையாது. நாங்க இருக்கும் இடத்திற்கு வீட்டுமனைப் பட்டா வேண்டி மதுக்கரை தாலுக்கா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தேன். நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, நாங்க வீடு கட்டி இருக்கும் இடத்தை எங்களுக்கே பட்டா போட்டு கொடுத்திருக்காங்க. ஆர்.எஸ்.புரத்தில் நடைபெற்ற அரசுநலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் வீட்டுமனைப் பட்டாவை தமிழ்நாடு துணை முதலமைச்சர் வழங்கினார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது நான் வசிக்கும் இடத்திற்கு பட்டாவை கொடுத்து எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை நிறைந்த மனதுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் வீட்டுமனைப்பட்டா பெற்ற மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம், சில்வர் ஜூபிலி, பகுதியை சேர்ந்த பயனாளி லெட்சுமி தெரிவித்தாவது,

என் பெயர் லெட்சுமி, என் கணவர் பெயர் கன்னையன். நான் சமையல் வேலைக்கு சென்று வருகிறேன். இந்த இடத்தில் நாங்க கடந்த 25 வருஷமாக வசித்து வருகிறோம். எங்களுக்குன்னு சொந்தமாக எந்தவொரு சொத்தும் கிடையாது. நாங்க வசிக்கும் இடம் புறம்போக்கு இடமாக இருந்தது. எங்களை போன்று இங்கு நிறையபேரு வசித்து வருகிறார்கள். வீட்டிற்கு பட்டா இல்லாததால் எங்களால் எந்தவித லோன் எடுக்கமுடியவில்லை. வேறு எந்ததொழில் செய்வதற்கும் எங்களிடம் பணம் இல்லை. வீட்டுமனைப் பட்டா வேண்டி மதுக்கரை தாலுக்கா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தேன். இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின்படி, நாங்க வீடு கட்டி இருக்கும் இடத்தை எங்களுக்கே பட்டா போட்டு கொடுத்திருக்காங்க. ஆர்.எஸ்.புரத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் வீட்டுமனைப்பட்டாவை தமிழ்நாடு துணை முதலமைச்சர் வழங்கினார். எங்கவீடு எங்களுக்கே சொந்தமானதால் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை நிறைந்தமனதுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வீட்டுமனைப்பட்டாக்களை பெற்ற பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சருக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டனர்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

# சாப்பாடு போட ஆள் இல்லாததால் கழுதை அறுத்துக்கொண்ட மாமனார்!



வாணியம்பாடி, ஜன.2

திருப்பத்தூர் மாவட்டம் சின்ன கசிநாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் வேடி (59). இவருடைய மனைவி மலர். இந்த தம்பதியினருக்கு ஏகநாதன் மற்றும் மேகநாதன் என இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளன. கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு மனைவி வீட்டை விட்டு வெளியேறி சென்னையில் குடி பெயர்ந்த நிலையில் முதல் மகனான ஏகநாதனும் சென்னையில் உள்ளார். இரண்டாவது மகனான மேகநாதன் திருப்பூரில் திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் சாப்பாட்டிற்கு கூட வழியில்லாமல் வேடி தனிமையில் வசித்து வந்துள்ளார். அதனைத் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு முன்பு மேகநாதன் மற்றும் அவருடைய மனைவி திருப்பூரில் இருந்து திருப்பத்தூருக்கு வந்து வேடியை பார்த்துக்கொண்டு வந்துள்ளனர். இந்த நிலையில் மேகநாதன் தனது பிள்ளைகளையும் திருப்பூரிலிருந்து அழைத்து வந்து திருப்பத்தூரில் உள்ள அரசு பள்ளியில் சேர்த்து படிக்க வைத்து வந்துள்ளார்.

இந்த நிலையில் அரையாண்டு தேர்வு முடிந்த பின்பு விடுமுறையில் பேங்க் புக்கு மற்றும் ஆதார் கார்டில் கரெக்ஷன் செய்ய தனது பிள்ளைகளுடன் மேகநாதன் மற்றும் அவருடைய மனைவியான சீதா ஆகியோர் திருப்பூருக்கு சென்றுள்ளனர்.

இதனால் மனமுடைந்த வேடி இனிமேல் தனக்கு சாப்பாடு போட கூட யாரும் இல்லை, மீண்டும் தனியாக வாழ வேண்டும் என நினைத்து தனது கழுதை அறுத்துக்கொண்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் மயங்கி கிடந்தார். இதனை அறிந்த அக்கம்பக்கத்தினர் உடனடியாக வேடியை மீட்டு திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இந்த நிலையில் இவரை பரிசோதித்த காது, மூக்கு, தொண்டை,சிறப்பு மருத்துவர் விக்னேஷ் சில மணி நேரம் போராடி அறுவை சிகிச்சை செய்து வேடியை காப்பாற்றினார்.

இந்த நிலையில் ஊர் திரும்பிய வேடியின் இரண்டாவது மருமகளான சீதா தனது மாமனாரின் உயிரை காப்பாற்றி சாதனை படைத்த அரசு மருத்துவர்களுக்கு நன்றியை தெரிவித்தார்.



காவேரிப்பட்டணம் அகரம் சாலையில் அமைந்துள்ள கோட்டை ஸ்ரீதேவி பூதேவி சமேத பிரசன்ன வெங்கடரமண சுவாமி திருக்கோவில் வைகுண்ட ஏகாதசி சொர்க்கவாசல் விழா நடைபெற்றது. அதனையொட்டி நேற்று காவேரிப்பட்டினம் நகர் பகுதி முழுவதும் சுவாமி திரு வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

## சின்னசேலத்தில்
# சவாரிக்கு அழைத்து சென்று நூதன ஆட்டோ திருட்டு!
## வாலிபர் கைது!!

கள்ளக்குறிச்சி,ஜன.2

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் புதிய பேருந்துநிலையம்அருகே ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோவை வைத்து பிழைப்புநடத்திவருபவர் சொக்கன் (52). நேற்று காலைதிருவண்ணாமலை மாவட்டம் தண்டராம் பட்டு வட்டம் பெருங்க ளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த அருண்குமார் என்பவர் சொக்கனிடம் வாடகைக்கு ஆட்டோ வேண்டு மென கேட்டுள்ளார்.

இதனை அடுத்து சொக்கன் ஆட்டோவை எடுத்துக்கொண்டுசின்னசேலம் அருகே நயினார்பாளையம் செல்லும் சாலையில் ரயில்வே கேட் அருகே அருண்குமாரை இறக்கி விட்டு உள்ளார்.

அங்கே அருண்குமார் 500 ரூபாய் கொடுத்ததால் சில்லறை வேண்டுமென கேட்டதற்கு சில்லறை இல்லை எனக் கூறியதால் சொக்கன் 500 ரூபாயை எடுத்துக் கொண்டு அருகே உள்ள கடைக்கு சில்லறை மாற்றி வர சென்றுள்ளார்.

மேலும் ஆட்டோவில் சாவி இருந்த நிலையில்



ஆட்டோவை அருண்குமார் திருடிச் சென்றார்.

இதனைக் கண்டு அதிர்ந்து போன சொக்கன் ஆட்டோவை தேடி அலைந்து பின்னர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்ட சின்னசேலம் போலீசார் ஆட்டோ சென்ற வழித்தடங்களில் உள்ள சி.சி. டி.வி. கேமராக்களை ஆராய்ந்து இறுதியாக இன்று காலை சங்கராபுரத்தில் வைத்து ஆட்டோவை பறிமுதல் செய்தனர்.

மேலும் திருடு போன ஆட்டோவை இரவோடு இரவாக ஸ்டிக்கர் ஒட்டி வாகனத்தை அடையாளம் தெரியாதது போல் மாற்றி உள்ளார். மேலும் பெரிய மாலை ஒன்றை வாங்கி போட்டு ஆட்டோவிற்க்கு பூஜையும் செய்துள்ளார்.

பின்பு அருண்குமாரை கைது செய்த போலீசார் சின்னசேலம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளனர்



தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி யூனியன் வெள்ளக்கல் கிராமத்தில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள புதிய துணை மின் நிலைய கட்டுமான பணியை, வெங்கடேஸ்வரன் எம்.எல்.ஏ. பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

## நல்லம்பள்ளி யூனியனில்
# துணை மின் நிலைய கட்டுமான பணி!
## வெங்கடேஸ்வரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

தர்மபுரி, ஜன. 2

தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி யூனியன் வெள்ளக்கல் கிராமத்தில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள புதிய துணைமின்நிலையகட்டுமானபணியை, வெங்கடேஸ்வரன் எம்.எல்.ஏ பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார்.

பாளையம்புதூர், டொக்குபோதன அள்ளி, சாமிசெட்டிப்பட்டி, ஏலகிரி, பாகலஅள்ளி, சிவாடி, மானியதஅள்ளி ஆகிய பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமங்களில் குறைந்த மின்அழுத்தம் ஏற்படுவதாக பொதுமக்கள் தர்மபுரி எம்எல்ஏவிடம் கோரிக்கை வைத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் குறைந்த மின்அழுத்தம் ஏற்படாமல் சீரான மின்சாரம் வழங்கும் பொருட்டு, துணை மின்நிலையம் அமைக்க வேண்டுமென சட்டப்பேரவை கூட்டத் தொடரில் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த மின்சாரத்துறை அமைச்சர் விரைந்து துணை மின் நிலையம் அமைக்கும் பணியை நிறைவேற்றுவதாக உறுதியளித்தார். அதனடிப்படையில் தர்மபுரி மாவட்டம், வெள்ளக்கல் கிராமத்தில் ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் கட்டுப்பாட்டு அறைகள், சுற்றுச்சுவர் மற்றும் கன்கிரீட் தரைத்தளத்துடன் கூடிய புதிய துணை மின்நிலையம் அமைக்கும் பூமிபூஜை நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு உதவி பொறியாளர் கவிதா, வணிக ஆய்வாளர் செந்தில்குமார், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் பழனிஅறிவு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளராக தர்மபுரி தொகுதி எம்எல்ஏ வெங்கடேஸ்வரன் கலந்து கொண்டு, ரூ.2.91 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ளபுதியதுணை மின் நிலைய கட்டுமான பணியை பூமி பூஜை செய்து தொடங்கி வைத்தார். இதில் பாமக நிர்வாகிகள் சண்முகம், முத்துவேல், அறிவு உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், மின்வாரிய அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் சட்டம் ஒழுங்கு மற்றும் சாலைபாதுகாப்புகுறித்தஆய்வுக்கூட்டம்மாவட்டஆட்சித்தலைவர்ரெ.சதீஸ்தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கவிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# ஈஸ்வரன் எம்.எல்.ஏ. புத்தாண்டு வாழ்த்து!

திருச்செங்கோடு, ஜன.2



கொமதேக கட்சியின் பொதுச் செயலாளரும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான ஈஸ்வரன் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

பிறக்கிற புத்தாண்டு அனைத்து தரப்பு மக்களுக்கும் வளம் தருகிற ஆண்டாக அமையட்டும், விவசாயம் மேலோங்கட்டும், உற்பத்தி பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கட்டும், அமெரிக்கா வரியின் மூலமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற தொழில்கள் பிரச்சினைகளி லிருந்து மீளட்டும். அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரிபழையசப்ஜெயில்ரோட்டில்அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள், பூஜைகள் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகப் பெருமானை வழிபட்டனர்.

## சங்ககிரியில்
# கிருத்திகை ரதோற்சவம்!

சங்ககிரி, ஜன. 2

சங்ககிரி சோமேஸ்வரர் கோயிலில் மார்கழி மாத வளர்பிறை கிருத்திகை நட்சத்திர தினத்தை முன்னிட்டு வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகவேலன் ரதோற்சவம் நடைபெற்றது.



சங்ககிரி சோமேஸ்வரர் கோயில் வளாகத்தில் சன்னதி கொண்டுள்ள ஆறுமுகவேலனுக்கு வளர்பிறை கிருத்திகை நட்சத்திர தினத்தை முன்னிட்டு பால், சந்தனம், மஞ்சள், தயிர், பன்னீர் போன்ற பல விதத் திரவியங்களால் அபிஷேகங்கள் நடைபெற்றது. பின்னர் மின்விளக்கு களால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் வள்ளி தெய்வானையுடன் ஆறுமுகவேலன் சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்தார். அப்போது ஆராதனையும், மஹா தீபாராதனையும் நடந்தது. பக்தர்களின் அரோகரா கோஷம் முழங்க கோயிலின் உள்பிரகாரத்தில் ஆறுமுகவேலன் ரதம் வலம் வந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ரதம் இழுத்து வழிபட்டனர். லன் சிறப்பு அலங்காரத்தில் காட்சியளித்தார்.



## ஏலகிரி மலை சுற்றுலாதலத்தில்
# ஏ.ஜி.எஸ் ஹாலிடே ரிசார்டில் புத்தாண்டு விழா கோலாகலம்!

திருப்பத்தூர். ஜன்.2

திருப்பத்தூர்மாவட்டம் சுற்றுலா தளமான ஏலகிரி மலை பகுதியில் உள்ள ஏ.ஜி.எஸ் ஹாலிடே ரிசார்டில் 2026 புத்தாண்டு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

2026 புத்தாண்டு வரவேற்கும் வகையில் வாண வேடிக்கை வெடித்தும், டி.ஜே மியூசிக் உடன் நடனங்கள் ஆடி புத்தாண்டு வாழ்த்துகளை கூறி சிறப்பாக கொண்டாடினர்.

முன்னதாக பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் சென்னை, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, ஆம்பூர், வாணியம்பாடி உள்ளிட்ட ஊர்களில் இருந்து சுற்றுலா பயணிகள் ஏலகிரி மலைக்கு வருகை தந்து புத்தாண்டுவிழாவை சிறப்பாக கொண்டாடினர்.

இறுதியாக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலி நபர்களுக்கு ஏ.ஜி.எஸ் ஹாலிடே ரிசார்ட் சார்பில் கிஃப்ட் கூப்பன்கள் வழங்கப்பட்டது.



திருப்பூர்கிழக்குமாவட்டம்,தாராபுரம்சட்டமன்றத்தொகுதி,தாராபுரம்மேற்குஒன்றியம், கவுண்டச்சிபுதூர் ஊராட்சி, கொண்டரசம்பாளையம் பாகம் எண்.122/புதிய பாகம் எண். 131க்கான "தமிழ்நாடு தலைகுனியாதுஎன் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" என்ற தலைப்பில் நடைபெற்ற செயல்விளக்க கூட்டத்தில் கலந்து கொண்டார் மனிதவள மேலாண்மைதுறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் உடன்தாராபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செந்தில்குமார், கொளத்துப்பாளையம் பேரூராட்சி தலைவர் சுதா கருப்புசாமி, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் தமிழ்செல்வன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணக்குமார், கொண்டரசம்பாளையம் ஊராட்சி நிர்வாகிகள், பாக முகவர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# அரூர் நகராட்சியில் ரூ.28 லட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சி திட்ட பணிகள்!



அரூர்,ஜன.2

தர்மபுரி மாவட்டம் அரூர் நகராட்சிக்கு உட்பட்ட அம்பேத்கர் நகரில் ரூ.13.25லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலையுடன் கூடிய வடிக்கால் அமைப்பதற்கும் கோல்டன்சிட்டி பகுதியில் ரூ.15 லட்சம் மதிப்பில் பைப்லைன் அமைக்கும் பணிகளுக்கும் நகராட்சி ஆணையர் ஹேமலதா கலந்து கொண்டு பூமிபூஜை செய்து பணியினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகராட்சி துணைத்தலைவர் சூர்யாதனபால் நகர மன்ற உறுப்பினர்கள் முல்லைரவி அருள்மொழிமோகன் ஜெயலட்சுமி வெங்கடேசன் நகராட்சி பொறியாளர் பிரேமா பணிமேற்பார்வையாளர் வினோத் ஒப்பந்ததாரர் குணசியார குநாத் மற்றும் நிர்வாகிகள் கு.தமிழழகன் விண்ண ரசன் மோகன் என்.எம்.எஸ். முருகேசன் ஜேசிபி .க.மோகன் முனுசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குரூப்-2, 2-ஏ தேர்வுகளுக்கு இலவச பயிற்சி!
## தர்மபுரி கலெக்டர் சதீஸ் தகவல்!!

தர்மபுரி, ஜன. 2

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஒருங்கிணைந்த குரூப் 2,2 ஏ முதன்மை தேர்வு மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான குரூப் 2,2ஏ முதல்நிலை தேர்வு ஆகிய தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் ஜன. 5 ஆம் தேதி முதல் தர்மபுரி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்தில் துவங்கப்பட்டு திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை வாரந்தோறும் தொடர்ந்து நடைபெற உள்ளது. மேலும், மேற்கண்ட தேர்வுகளுக்கான இலவச மாதிரி தேர்வுகள் முறையாக திட்டமிடப்பட்டு நடத்தப்படவுள்ளன. 2025 ஆம் ஆண்டு குரூப் 2ஏ முதல்நிலை தேர்வில் இவ்வலுவலகத்தில் பயின்ற 14 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



இவ்வலுவலகத்தில் பள்ளிப் பாடபுத்தகங்கள் உட்பட 3000க்கும் மேற்பட்ட நூல்கள் அடங்கிய இலவச நூலக வசதி, இலவச பயிலக வசதி, இலவச வைபை மற்றும் இலவச கணினி பயன்படுத்தும் வசதி போன்ற தேர்வர்கள்பயன்பெறும் வகையிலான அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே, இப்பயிற்சி வகுப்பில் சேர விருப்பமுள்ளவர்கள் https://tinyurl.com/s6hvuuh5 என்ற இணைப்பின் மூலம் தங்களை பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், விவரங்களுக்கு அவலுவலகத்தை நேரிலோ அல்லது அலுவலக தொலைபேசி எண் 04342 288890 வாயிலாகதொடர்பு கொள்ளலாம். இம்மாவட்டத்தில் தகுதி வாய்ந்த தேர்வர்கள் இந்த இலவச பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறுமாறு கலெக்டர் சதீஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

# துளுவ வேளாளர் மற்றும் அகமுடையார் சங்கம் சார்பாக முப்பெரும் விழா!



திருப்பத்தூர் ஜன.2

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் இன்று திருப்பத்தூர் மாவட்ட துளுவ வேளாளர் அகமுடையார் சங்கம் சார்பாக முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக அண்ணா அருணகிரி. நிறுவனத் தலைவர் மற்றும் அண்ணாபிற படுத்தப்பட்டோர் முன்னேற்ற கழகம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் பின்பு மன்னர் மருது பாண்டியர் 224வது குருபூஜை விழாவும் மாமன்னர் மருத பாண்டியருக்கு வெங்கல சிலை அமைத்த டி.ஜி புல்லட் சுரேஷ் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்துவோம் திருப்பத்தூர் மாவட்ட துளுவ வேளாளர் அகமுடையார் சங்கம் காலண்டர் வெளியீட்டு விழா போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெற்றது இதில் சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர் மேலும் சிறப்பு அழைப்பாளர்கள் டி என் டி கே சுபாஷ். பி வி பிரேம்குமார். ராஜா. நகர மன்ற உறுப்பினர் கைலாஷ் திருப்பத்தூர் மண்டலதுணை செயலாளர் செல்வராஜ்திருப்பத்தூர் மண்டல அவை தலைவர் கலாநிதி புருஷோத்தமன் மண்டல ஒருங்கிணைப்பாளர் குனிசி நவீன் குமார் மண்டல அமைப்பு செயலாளர் வேல் வடிவு. மண்டல மகளிரணி தலைவி டில்லி ராஜி. திருப்பத்தூர் வடக்கு மாவட்ட செயலாளர் அன்பரசு திருப்பத்தூர் மேற்கு மாவட்ட செயலாளர்ஜனார்த்தனன்திருப்பத்தூர் கிழக்கு மாவட்ட செயலாளர் சிவா. திருப்பத்தூர் தெற்கு மாவட்ட செயலாளர் பார்த்திபன் கவுன்சிலர். முருகேசன் மாவட்ட தலைவர். பிரியாதேவி மாவட்ட மகளிர் அணி செயலாளர். ஏ சி செல்வகுமார் மாவட்ட அவை தலைவர். ஏ எஸ் தட்சிணாமூர்த்தி திருப்பத்தூர் மண்டல இளைஞர் அணி தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.